DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.06/2023**

**prosecution witness: Pw 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**<u>Accused present</u>**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மாரிவேல் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**<u>19.05.2023</u>**

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் தற்சமயம் சார்பு ஆய்வாளராக மண்டபம் காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். மேற்படி வழக்கில் அ.சா.1 புகார்தாரர் பிறழ் சாட்சியாக சாட்சியமளித்துள்ளபடியால் வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.கோட்டைசாமி அவர்கள் பணிமாறுதலாகி சென்றுவிட்டபடியால், ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் நான் கூடுதல் சாட்சியாக சாட்சியமளிக்க அனுமதி வேண்டி அனுமதியின் பெயரில் சாட்சியமளிக்கிறேன்.

2.கடந்த 13.03.2022-ம் தேதி 11.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.கோட்டைசாமி அவர்கள் நிலையப் பொறுப்பில் இருந்தபோது களஞ்சியராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்றவாறு நிலையக் குற்ற எண்.64/2022, பிரிவுகள்.294(b), 323, இதச மற்றும் 4 of TNPHW Act கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார்.

3. புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து இராமேஸ்வரம் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.சா.**ஆ.2** ஆகும்.

4. புகார் மனு, முதல் தகவல் அறிக்கை அசல்களை இராமேஸ்வரம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், பிற நகல்களை சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை விசாரணைக்கு எடுத்துகொண்டு. அன்றைய தினம் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பஞ்சவர்ணம் மற்றும் ராமு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் பார்வை மகஜர் அ.சா.ஆ.**3** ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.**4** ஆகும்.

5. பின்பு சாட்சிகள் களஞ்சியராணி, மாரிமுத்து, முருகம்மாள், பொன்முனியாண்டி, பழனீஸ்வரி, பஞ்சவர்ணம் மற்றும் ராமு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளார்.

6. அதன்பின்பு வழக்கின் எதிரி செல்வம்(எ) செல்வராஜ் என்பவரை 04.05.2022-ம் தேதி 11.30 மணிக்கு மண்டபம் காவல் நிலையம் எதிரே வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையப் பிணையில் விடுவித்துள்ளார்.

7. .இறுதியாக தனது விசாரணையை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள். 294(b), 323, இதச மற்றும் 4 of TNPHW Act படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1. வழக்கின் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிடாமல் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன தேதியில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. வழக்கிற்கும், ஆஜர் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கினை சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான்.